சிவமயம்



அமரர்

# திரு. மாணிக்கம் பத்மநாதன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

12.06.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தெல்லிப்பளை - கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட

# அமரர் மாணிக்கம் பத்மநாதன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 12.06.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பதின் நலத்திற்கும்
வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து
அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
எம்மை வளர்த்து நல்வழிகாட்டி, சீரும்
சிறப்புடனும் வாழ வைத்த எமது
அன்புத் தெய்வத்திற்கு இச் சுடரை
அவர் தம் பாதங்கிளல் அன்புடன் சமர்ப்பித்து
வணங்குகின்றோம்.

அன்புடன்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# என்றும் எம் நினைவுகளில்

மண் மகிழ
27 – 07 – 1944



கண் நெகிழ
13 – 05 – 2018

அமரர்

# திரு. மாணிக்கம் பத்மநாதன்

(தருமு)

## திதி வெண்பா

*ஸ்ரீவிளம்பி வருச சித்திரை திங்கள்தனில்*
*அபர திரயோதசி திதியில் - மாண்புடைய*
*வல்லோன் பத்மநாதன் பூவுலகதனை விட்டு*
*மெல்லவென விரைந்தார் விண்ணகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மாணிக்கம் பத்மநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழமணித்திருநாட்டின் வடபாலமைந்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் எழில் கொஞ்சும் வளமிகு கிராமமாக விளங்குவது கட்டுவன். ஞான வைரவரும் வீரபத்திரரும் மாவடி வைரவரும் விரும்பிக் கோயில் கொண்டுறையும் சூழலில் சைவப்பரம்பரையில் சைவவேளாளர் குலத்தில் உதித்த மாணிக்கம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூன்றாவது பிள்ளையாக பத்மநாதன் 1944ஆம் ஆண்டு ஆடி மாதம் 27ஆம் திகதி பிறந்தார். சிவபாக்கியம், பத்மாவதி, புஸ்பமலர், மகேஸ்வரி, கந்தசாமி, அற்புதமலர் ஆகியோர் இவரது உடன்பிறந்தவர்களாவர்.

தனது கல்விப் படிப்பை கட்டுவன் பாலர் ஞானோதய வித்தியாசாலையில் பெற்ற பத்மநாதன் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக இளம் வயதிலே கனரக வாகன சாரதியாக தொழில் புரிந்தார்.

திருமணவயதை அடைந்ததும் குரும்பசிட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுந்தரம் தம்பதியினரின் மகள் சிவசக்தியை 1979இல் திருமணஞ் செய்து கொண்ட பத்மநாதன். இவர்களின் இல்லறப் பயனாக பிரதீபன்,, சஞ்சீவன், பிரியா, சங்கீதா ஆகிய பிள்ளைகளை பெற்றெடுத்தனர். தனது பிள்ளைகளை வளர்த்து அவர்களை நல்ல நிலைக்கு உயர்த்தினார்.

பிற்காலத்தில் இருதய நோயினால் தொழில் புரியமுடியாது போனபோதும் மனைவி தன் மக்களுடன் சிறப்புறவே கொழும்பில் வாழ்ந்து வந்தவருக்கு வாழ்வில் பேரிடியாக பெருந்துணையாக வாழ்ந்த அன்பு மனைவியை 2013 ம் ஆண்டு நோயினால் இழந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மூத்த மகன் பிரதீபனை தங்கேஸ்வரன் நீலாம்பிகை தம்பதிகளின் புதல்வி தாரணிக்கு திருமணம் செய்து கொடுத்து பிரதாஸ் எனும் பேரனையும் பெற்று மகிழ்ந்தார். இவர்கள் கிளிநொச்சியில் வாழ்ந்து வருகின்றனர்.

இரண்டாவது மகன் சஞ்சீவனை வேல்நாதன் கமலாதேவி தம்பதிகளின் புதல்வியான சுகனியாவிற்கு திருமணம் செய்துவைத்து டிஷான் எனும் பேரனையும் பெற்று மகிழ்ந்தார். சஞ்சீவன் Worldwide Entertaiment எனும் நிறுவனத்தை கொழும்பு 06 இல் நடாத்தி வருகிறார்.

தனது மூத்த மகளான பிரியாவை சின்னத்தம்பி ஜெயமணி தம்பதிகளின் புதல்வன் நிரோசனுக்கு திருமணம் செய்து வைத்து பிரிஷான் எனும் பேரனையும் விருஷாலி எனும் பேர்த்தியையும் பெற்று மகிழ்ந்தார். இவர்கள் லண்டனில் வாழ்ந்து வருகின்றனர்.

இளைய மகள் சங்கீதா கொழும்பில் வாழ்ந்து வருகின்றார்.

தனது 74 வயதில் 13.05.2018 மாலை 5.45 மணியளவில் திரயோதசி திதியில் பூலோக வாழ்வை நீத்து சிவலோக வாழ்வு பெற்று அமரரானார் பத்மநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராண தோத்திரங்கள்



ஐந்துகரத்தனை ஞானமுகத்தனை
இந்தின் இளம்பிறைபோலும் எயிற்றனை
நன்றிமகன்தனை ஞாலக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள் ளுறுசூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி,
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து, புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெருமானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்!
எங்கெழுந்தருளுவது இனியே?

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்?
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நிறைந்த கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலாவல்லிமாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனற் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திரம்

ஓம்

பூர் புவ ஸ்வஹா

தத் ஸவித்துர் வரேண்யம்

பர்கோ தேவஸ்ய தீமஹி

திய் யோ யோந ப்ரச்சோதயாத்

ஓம் - பரப் பிரமம் : பூர் - பூலோகம் (மெய்வாகனம்) ஐந்து பூதங்களாகிய இவ்வுடம்பையும் குறிக்கும். ஐந்து பூதங்களான நிலம், நீர், ஆகாயம், தீ, காற்று ஆகிய பிரகிருதி (இயற்கை) : புவ- புவர் லோகம், மத்திய லோகம் இது பிராண சத்தியையும் குறிக்கும். பிரக் ஞானமே பிராண சக்தியை உடம்பை இயக்கச் செய்கிறது. இதனாலேயே பிரக் ஞானத்தை பிரக்குணப்பிரம்மம் என்கிறது வேதம் (சாட்சியாய் அமையும் பிரமம்): ஸ்வஹா - சுவர்க்கலோம் - சுவர்க்கம் தேவர்களின் உலகம் : தத் - பரமாத்மா, கடவுள் பிரஹ்மன் : ஸவித்தூ - இத்தகைய எல்லாத் தோற்றங்களையும் தோற்றுவித்து : வரேண்யம் - வழிபடுவதற்குரிய வஸ்து : பர்கோ ஒளிக்கதிர், ஆன்மீக ஒளி, அஞ்ஞானத்தை அழித்து ஞானமளிக்கும் ஒளி : தேவஸ்ய - தெய்வீக உண்மையாக விளங்குகின்ற : தீமஹி - நாம் தியானிப்போமாக : தியோ - புத்தி, புத்திக்கூர்மை : யோ - எது ந - எங்களது : பிரச்சோதயாத் - பிரகாசிக்கச் செய்வாாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தமகன் மனதிலிருந்து...!

கைபிடித்து நடைபழகி
தோள் தாண்டி வளர்ந்த பின்னே
என் மகன் என பெருமிதம்
கொண்டீர்கள் அப்பா...

வாழ்க்கையெனும் படிக்கட்டில்
நான் அவ்வப்போது விழும் தருணங்களில்
உம் கரம் கொண்டு தூக்கி விட்டீர்களே
இனி உமை எங்கு காண்பேனோ அப்பா...

அம்மாவின் பிரிவால் துயர் காண்ட நீங்கள்
தனி ஒருவராய் எமைக் கரை சேர்க்க
நீர் பட்ட கஷ்டங்கள் அறிவேன் அப்பா....

என்றும் எமைக் காக்கும் தெய்வமாய்
இருப்பீர்கள் எனும் நம்பிக்கையில்
எம் நாட்கள் நகர்கிறது அப்பா...

**மகன் - பிரதீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்புத் தெய்வமே "அப்பா"

எங்கள் வாழ்வும் வளமும் நீங்கள் தந்ததல்லவா அப்பா. நான் செய்த பாவமோ புண்ணியமோ என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும் கடவுளைக் கேட்கின்றேன். ஏன் எனக்கு மட்டும் இவ்வாறான கொடிய ஒரு அனுபவத்தைத் தந்தாய் என்று? ஆமாம்... ஏன் எனக்கு மட்டும் இப்படி ஒரு சாபம்... என்னைப்பெற்ற அம்மா, அப்பா இருவரின் உயிரும் என் கண் முன்னிலையிலேயே பிரிந்து போவதை?

உயிர் விடைபெறும் போது, உங்களைச் சுற்றி நடப்பதை நீங்கள் பார்க்க முடியுமாமே, பார்த்தீர்களா எங்களை? பரிதவித்து செய்வதறியாது நாம் நின்ற கோலத்தை... எப்படி மனம் வந்தது எம்மையெல்லாம் அநாதையாக விட்டுச் செல்ல? மறுபிறப்பொன்று இருந்தால். நீங்கள் எனக்கு அப்பாவாக வேண்டும். என் பிள்ளையை நேரில் பார்க்கக் கூடிய பாக்கியம் வேண்டும். உங்களை இறுதிவரை சந்தோஷமாக வைத்திருக்கக் கூடிய பாக்கியம் பெற்ற மகனாகப் பிறக்க வேண்டும்.

மீண்டும் உங்கள் உயிர் பிரியும் போது நான் பக்கத்தில் நின்று பரிதவிக்கின்ற சூழ்நிலைய மட்டும் எனக்கு கொடுத்து விடாதே இறைவா என்று வேண்டிக் கொண்டு

உங்கள் ஆத்மா அம்மாவுடன் சேர்ந்து சாந்தியடைய ஆண்டவனை வேண்டி நிற்கும்

**உங்கள் அன்பு இளைய மகன்**
**சஞ்சீவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தமகளின் நினைவில்...!

''அப்பா'' என்றழைக்க இனி இல்லை நீங்கள் எமக்கு. எப்போதாவது மௌனம் கலைக்கும் உங்கள் குரலும் இனி இல்லை. இனி இப்பூமியில் நீங்கள் இல்லை என்று தெரிந்தும் சிறு பிள்ளையாய் மனம் ஏற்க மறுக்கின்றது.

உங்களுக்கும் எனக்குமான உறவு எப்பொழுதும் இடைவெளி நிறைந்ததாகவே இருந்திருக்கிறது. அநேகமான தொலைபேசி உரையாடல்களும் 2 அல்லது 3 வசனங்களிலேயே முடிந்து விடும். உங்களுக்கென்று எதுவுமே வாய்விட்டு கேட்க மாட்டீர்கள்.

உங்களை கடைசியாக நேரில் பார்த்தது அம்மாவின் இறந்த செய்தி கேட்டு வந்தபோதுதான். இப்பொழுது 5 வருடங்கள். அதற்குள் நீங்களும் அம்மாவைத் தேடிச்சென்று விட்டீர்கள்.

ஆம், உண்மைதான். இப்போது உணர்கிறேன் அம்மாவைப் போல் உங்களை யாராலும் பார்க்க முடியாது. உங்கள் உணர்வுகளை மதிக்கவும் தெரியாது. அதனால் தானோ என்னவோ வெகு சீக்கிரமாகவே அம்மாவிடம் சென்று விட்டீர்கள். எங்களை விட்டுப் பிரிந்த சோகம் இருந்தாலும், உங்களை சந்தோஷமாக வைத்துப் பார்க்கும் ஜீவனுடன் கலந்து விட்டீர்கள் என்ற சிறு சந்தோஷம்.

சகோதர பாசம் என்றால் என்ன என்பதை உங்கள் பாசத்தின் மூலம் கண்டு கொண்டேன். உங்களுக்கு கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு மேல் இருதய நோய் இருந்தும் அப்போதும் உங்களிடம் சரீர உதவி கேட்டு வருபவர்களுக்கு ஒரு போதும் மறுப்புச் சொல்லாமலும் உங்கள் வருத்தத்தைப் பொருட்படுத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலும் சிரித்த முகத்துடன் நேரம் பார்க்காமல் உதவி செய்கின்ற நல்ல குணத்தைப் பார்த்து வியந்திருக்கின்றேன். உங்களுடைய புன்சிரிப்பும் மற்றவர் மனதைக் காயப்படுத்தாத உங்கள் பண்பும் என்னை ஆச்சரித்துடன் பார்க்க வைக்கின்றது.

கடைசியாகக் கூட வைத்தியசாலையில் உங்களைப் பார்க்க வந்தவர்களுடனும் தொலைபேசியில் நலன் விசாரித்தவர்களுடனும் உங்கள் உடல் நோயைப் பற்றிச் சொல்லிக் கவலைப்படுத்தாது மாறாக உங்களுடனே கூடப் பிறந்த நக்கல் பேச்சினால் எல்லோரையும் சிரிக்க வைத்தீர்கள். வியப்பாக இருக்கிறது...

உங்கள் கஷ்டத்தையோ நோயினால் நீங்கள் பட்ட துன்பத்தையோ ஒருபோதும் பகிர்ந்ததில்லை யாரிடமும். அது மட்டுமா பிழை என்று தெரிந்தாலும் அவர் மனது கோணிவிடக் கூடாது என்று எண்ணி எதுவுமே சொல்லாது, எல்லோரையும் சமாளித்து உங்கள் கஷ்டத்தை என்னுடன் பகிராமலே சென்று விட்டீர்கள் என்று நினைக்கையில் நான் ஒரு பாவிதான். உங்களுடைய பேரப்பிள்ளைகளை நேரில் காணாமலே சென்று விட்டீர்களே...

இறைவனுக்கும் பொறுக்கவில்லை போல். அதனால் தானோ தெரியவில்லை கடைசி நேரத்தில் நோயைத் தந்து கஷ்டப்படுத்தி உங்கள் உயிரை எங்களிடமிருந்து பிரித்து விட்டார் போலும்...

அம்மாவின் மரணம் எனக்கு இறப்பின் வலியை உணரச் செய்தது, ஆனால் உங்களின் இறப்போ வாழ்க்கையை உணரச் செய்தது. என்னைச் சுற்றியிருக்கும் மனிதர்களின் சுபாவத்தை அறியச் செய்தது. முக்கியமாக நீங்கள் எங்களுக்காக செய்த தியாகங்களை உணர்த்தியது. நினைக்கையில் நான் ஒன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குச் செய்யவில்லையே என்ற குற்ற உணர்ச்சி மட்டும் மிச்சமாக உள்ளது.

நீங்கள் இறக்கும் போது என்ன உங்களுடன் கதைப்பதென்று தெரியாமலே ஓரிரு வார்த்தைகளில் தொலைபேசி உரையாடல் முடிந்துவிடும். ஆனால் இப்போது நிறைய உங்களுடன் கதைக்க வேண்டும் போல் மனம் உள்ளது. ஆனால் கதைப்பதற்கோ நீங்கள் இல்லை...

இனி எப்போது உங்கள் நக்கல் பேச்சும், பிறிஷானும் நீங்களும் டோய், டோய் என்று சிரித்து அவனையும் சிரிக்க வைத்து சந்தோஷப்படும் உங்களைப் பார்ப்பது? தாங்க முடியவில்லை உங்கள் திடீர் பிரிவு. உங்கள் இறுதி அஞ்சலியில் கூட கலந்துகொள்ள முடியாத பாவியாகி விட்டேன்...

**உங்கள் பிரியமான மகள்**
**பிரியா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையமகளின் நினைவில்...!

ஆயிரம் மடங்கு அன்பை தன் உள்ளே
புதைத்துக் கொண்டு வீம்புக்கு வெளியே
கோபத்தைக் காட்டிக் கொள்ளும் ஒரே ஒரு ஜீவன்!

சிறுவயதில் உங்கள் அருகில் உறங்கிய நாட்களும்
உங்களுக்காக காத்திருந்து உங்கள் வருகை கண்டதும்
உறக்கம் போல் நடித்து நீங்கள் எனை
அழுங்காமல் தூக்கி சென்று உறங்க வைத்த
அழகான நாட்களை மீட்டிப் பார்க்கின்றேன்.

ஓர் தந்தையாய் நீங்கள் அதட்டும் போதெல்லாம்
ஆக்ரோசமாய் வெடித்ததுண்டு
அறிவுரைகள் சொல்லும் போது
அறுவையென்றும் நினைத்ததுண்டு
பட்ட பின்பு தான் புரிந்து கொண்டேன்
நீங்கள் உரைத்தது என் புத்திக்கு வேதம் என்று!

மண்ணிற்கு அறிமுகம் செய்த தந்தையே
உங்களைக் கடலோடு கரைத்து விட்டு
நீங்கள் கலந்து விட்ட மூச்சுக் காற்றை
காற்றில் நான் தேடிக் கொண்டிருக்கின்றேன்.

ஒரு நாள் இந்த மரணம் என்னையும் தழுவிக்கொள்ளும்
காத்திருங்கள் என் வரவுக்காய்
அது வரை காத்திடுங்கள் காவல் தெய்வமாய்.

**சொல்ல முடியா வலிகளுடன்**
**உங்கள் கடைசி மகள் சங்கீதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மூத்தமருமகள் உள்ளத்தில் இருந்து...!

மாமா உங்களை என் தந்தை போல் நினைத்திருந்தேன். நீங்கள் எங்களுடன் இருந்த நாட்களில் உங்கள் நகைச்சுவைப் பேச்சும் சிரிப்பும் மறக்கமுடியவில்லை. 3 இடியப்பம் மட்டும் போதும் என்பீர்கள். உங்கள் மகள் மாதிரிப் பார்த்துக் கொண்டேன். இருந்தும் கொடிய காலன் நோய் எனும் வடிவில் வந்து பிரித்துக் கொண்டான். மாமா உங்களை பிரிந்து தவிக்கின்றோம். மாண்டவர் மீள்வாரோ.

உங்கள் ஆத்மாவின் அமைதிக்காய் பிரார்த்திக்கின்றேன்.

இறையடி சேரட்டும் உங்கள் ஆத்மா

**மூத்த மருமகள்**
**தாரணி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் என் மனதில் நீங்கள் அன்பு மாமா

உங்கள் இளைய மகனைத் திருமணம் செய்தாலும் உங்கள் வீட்டிற்கு முதல் முதல் மருமகளாகக் காலடி எடுத்து வைத்ததாலோ என்னமோ, நீங்கள் என்னை மருமகளாகப் பார்க்காமல் எப்பொழுதும் ஒரு மகளாகவே பார்ப்பீர்கள். உண்மைதான், மாமா எனும் பந்தத்தைத் தாண்டி, ஓர் அப்பா மாதிரி என்னைப் பார்த்துக் கொண்டீர்கள். நல்லதோ, கெட்டதோ எல்லாமே என்னிடமே வெளிப்படையாகக் கதைப்பீர்கள். உங்களின் நக்கல் பேச்சுக்கு எப்பொழுதும் நான் உங்கள் ரசிகைதான் மாமா.

ஓரிரு வருடங்கள் உங்களுடன் இருந்து, என் கையால் சமைத்துத் தரக்கூடிய பாக்கியத்தைப் பெற்ற மருமகள் என்ற சந்தோஷம் இருந்தாலும், உங்களின் இறுதித் தருணத்தில் ஏன் அந்த இறைவன் நம்மிடையே இடைவெளியைத் தந்தான் என்று நினைக்கையில் மனம் வருந்துகிறது.

நீங்கள் மரணப்படுக்கையில் இருக்கிறீர்கள் என்ற செய்தி கேட்டு ஓடோடி வந்தும் என் பிள்ளையைக் காட்ட முடியவில்லை யென்ற மன வேதனையும் உங்களை இவ்வாறான சூழ்நிலையில் என்னைப் பார்க்க வைத்த கடவுளை எண்ணி என் மனம் பட்ட மரண வேதனையை உணர்ந்தீர்களா தெரியவில்லை. ஆனாலும் நீங்கள், என் விரல்கள் உங்களை வருடும் போது, என்னை உங்கள் விழியைத் திறந்து பார்த்த பார்வையும், "ம்" என்ற குரலும் உணர்த்துகிறது இறுதியில் நான் சொல்ல முடியாத வேதனையில் என் மனம் பட்டபாட்டை நீங்கள் உணர்ந்தீர்கள் என்று...

உங்கள் ஆசீர்வாதம் என்றும் என் மகனுக்கு இருக்கும் என்ற அவாவில் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

**உங்கள் செல்ல மருமகள்**

**சுகனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் மாமாவிற்கு...!

உங்களை நேரில் பார்க்கின்ற வாய்ப்பை இறைவன் கொடுக்காவிடினும், ஓரிரு நாட்கள் உங்களுடன் தொலைபேசியில் கதைக்கின்ற வசதி கிடைத்தது. அளவாக ஓரிரு வார்த்தைகள் மட்டும் பேசுவீர்கள். அதிலும் கூடுதலாக உங்கள் சிரிப்பே இருக்கும்

இறப்பதற்கு ஒருவாரம் முன்பு உங்களுடன் கதைத்த போது கூட, நான் உங்களுக்கு இப்ப எப்படி இருக்கிறது? வருத்தம் என்று கேட்ட போது, கதைப்பதற்கு கொஞ்சம் களைப்பாக இருக்கிறது மற்றும் சாப்பாடு வயரால்தான் போகின்றது என்று நிதானமாகவே கூறினீர்கள். இந்த நிலைமையிலும் உங்கள் பொறுமையான பேச்சைக் கேட்கையில் ஆச்சரியமாக இருந்தது.

ஆனாலும் தொடர்ந்து கதைப்பதற்கு உங்கள் வருத்தம் காரணமாக முடியவில்லை. இறுதி நேரத்திலும் உங்களோடு கதைக்க கூடிய வாய்ப்பை எண்ணி மனம் சந்தோஷப்பட்டாலும் என் இரு பிள்ளைகளையும் நேரில் கூட்டி வந்து உங்களுக்குக் காட்டக் கூடிய பாக்கியம் கிடைக்கவில்லை என்பதை நினைக்கும் போதுதான் கவலையாக உள்ளது. மரணத்திற்குத் தெரியுமா மனிதனின் ஆசைகள் ???

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்

**உங்கள் அன்பு மருமகன்**
**நிரோஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரன் பிரதாஸ் குட்டியின் உள்ளக்குமுறல்

அப்பப்பா! அப்பப்பா! என்று இனி யாரை நான் கூப்பிடுவேன். டேய் டேய் ஏனடா அழுகிறாய் என்று செல்லமாய் வெருட்டினீங்களே! என்னைத் தொட்டுத் தூக்கி நான் தூக்கிய முதல் பேரன் நீ தான் என்றீர்களே அப்பப்பா! வோக்கரில் நான் ஆ... ஆ... என்று கத்திக்கொண்டு உங்கள் பின்னாலே ஓடி வருவேனே அப்பப்பா. உங்கள் பிறந்தநாளுக்கு எனக்குக் கேக் தீத்தினீங்களே. நீங்கள் இல்லாத என் பிறந்த நாளை எவ்வாறு தாங்குவேன் அப்பப்பா. கடைசியாக நான் அழுத போது நீங்கள் பாட்டெல்லாம் பாடினீங்களே அப்பப்பா. என் மூத்த பேரன் இளநீர் குடிக்க என்று எனக்காய் ஒரு தென்னைமரம் நட்டுத்தந்தீர்களே அப்பப்பா!

மறக்க முடியவில்லையே. உங்கள் ஆத்மா அமைதியடையட்டும். இறையடி சேரட்டும் அப்பப்பா.

**பேரன்**
**பிரதாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மப்பா நீங்கள் எங்கே?

இனி நாங்கள் யாரை
''அம்மப்பா' என்று அழைப்பது?
Viber இல் என்னைப் பார்த்து,
என்னைப் போலவே நீங்களும்
''டோய், டோய்'' என்று குரல் எழுப்பி
என்னை மேலும் மேலும்
கதைக்க வைத்தும்
சிரிப்புக் காட்டி விளையாடும்
உங்கள் விளையாட்டை
இனி எப்போ காண்பேன்?

எங்களை நேரில் பார்க்க
உங்களுக்கு விருப்பமில்லையா?
எதற்காக அவசர அவசரமாக
எங்கள் எல்லோரையும்
விட்டுப் பிரிந்தீர்கள் அம்மப்பா?

**உங்கள் பிரியமான**
**பேரன் - பிரிஸன்**
**பேத்தி - விருஷாளி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான திருவுருவமே...!

அன்பான திருவுருவே அண்ணாவே!
என்றும் மங்காத பேரன்பு அண்ணாவே!
எங்களை துயரில் ஆழ்த்தி விட்டு போனதேனோ?

நீ பூமியில் இருக்கும் வரை
உனக்காக அழுததில்லை!
நீ எங்களை விட்டு பிரிந்தவுடனே
அழாமல் இருந்ததில்லை!
பொறுமைக்கும் உவகை நீதானே;
பொறுத்ததெல்லாம் போதும் என
சென்று விட்டாயோ

சிந்தை கலங்க வைத்து
எம்மை தவிக்கவிட்டு - நீ
சிறகடித்துப் பறந்ததெங்கே!
விந்தையாய் உள்ளதண்ணா
உன் மரண வேதனையால்
தவிக்கிறோம் நாம் இங்கே!
கண்ணீர் ஆறென ஓடுதண்ணா
எம் கவலைகள் தீர வழி தேடுகின்றோம்;
கத்திக் கதறுவதால் நீ வருவதில்லை
ஆனாலும் கதறுகின்றோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் அழைக்கையில்
பேசாத மௌனம் உன்னிடம்
தாம் கண்டோம்
அண்ணா நீயேன் கண்மூடி
கடும் பயணம் மேற்கொண்டாய்
எங்கும் எதிலும் வேதனைகள்
எல்லா திசைகளிலும் அழுகுரல்கள்

பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை புழுவாய்
துடிக்க வைக்குதண்ணா!
மண்ணில் செய்த புண்ணியங்கள் போதும்
என்றும் விண்ணில் குடி புகுந்தீர்களோ அண்ணா?

உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை வேண்டி நிற்கும்

**சகோதரங்கள்**
**சிவபாக்கியம்**
**பத்மாவதி**
**புஸ்பமலர்**
**மகேஸ்வரி**
**கந்தசாமி**
**அற்புதமலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தும் நம் இதயத்தில் பத்மநாதன்....

தன் உற்றார், உறவினர், நண்பர்கள் அன்புடன் தன்னைச் சூழ்ந்து நிற்க வாழும் வாழ்க்கையே ஒருவன் வாழ்விற்கு கிடைத்த பெரும் பயன். மனம் வைத்தால் எவராலும் அப்படியான வாழ்வை வாழமுடியும். அவ்வாறு வாழ்ந்தவர்தான் பத்மநாதன்.

பிறர்பால் காட்டிய அன்பும் தேவையறிந்து அவர் செய்த தேக உதவியும் அவரைச் சுற்றி அன்பர்களாய் இருக்கச் செய்தது.

மற்றவர்களின் தேவையறிந்து பிரதிபலன் பாராது தேவைகளை சரியான நேரத்தில் பூர்த்தி செய்து தன் வாழ்வில் மிளிர்ந்தார். அன்னாரின் அவ்வாறான சிறப்புப் பண்புகளே என்னை மிகவும் ஈர்த்தது

''பிறர் துன்பம் தன் துன்பம் போல் எண்ணுபவன்
இறந்தும் வாழ்வான்''

**க.வே.மகாதேவன் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மச்சானின் மனதில் இருந்து...!

தோழன் என உரிமை கொண்டீரோ
அதனால் நான் உம் தேவைகளை
எனக்கும் உரைத்தீரோ...!

மனோகர் மனோகர் என்றழைத்து
நீர் தரும் அன்புத் தேனீரை
இனி என் கனவில் மட்டும் தான்
சுவைப்பேனோ...

பழைய கதைகள் பல பேசி
நீர் அடிக்கும் பகிடிகளும்
உம் புன் சிரிப்பும் கண்முன்னே
வந்து போகுதய்யா...

எதற்கும் கலங்காத என் மனதையும்
உம் பிரிவால் கலங்கடித்து விட்டீரய்யா

உம் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்

**உங்கள் மச்சான்**
**மனோகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தி முருகையாவின் இதய வரிகள்

நீண்ட நாள் சினேகிதனே சம்பந்தியாய் வந்ததையிட்டு சந்தோசப்பட்டேனே. தருமண்ணே தருமண்ணே என்று பல கதை பேசித் திரிந்தோமே!

சம்பந்தி ஆன பின்பு பழங்கதைகள் பேசிப் பேசி இரண்டுபேரும் பால்கஞ்சி குடித்தோமே. இருவரும் பக்கத்துப் பக்கத்தில் பாய் போட்டு பராசக்தி தியேட்டரில் படம் பார்த்த கதை மற்றும் பல பழங்கதைகள் பேசிச் சிரித்திருந்தோமே. அதற்கிடையில் எமை பிரிந்தீரே என் நீண்டநாள் நண்பனே.!

எம் குடும்ப நண்பனே, எமைப் பிரிந்த சோகம் தாங்கமுடியவில்லை. உம் ஆத்மா சாந்தியடைந்து இறையடி சேரட்டும்.

சாந்தி

**சம்பந்தி**
**முருகையா தங்கேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு சிவம் மாமா

பெரியப்பா என்று அழைத்ததில்லை
சிவம் மாமா என்றே அழைத்தோம்
உங்கள் நகைச்சுவை பேச்சால்
யாவரையும் கவர்ந்தீர்கள்
மௌனமாகி இன்று
மீளாத் துயில் கொண்டீர்கள்
இறப்பு எனும் நிகழ்வு வாழ்வில்
நிச்சயம் என நாமறிந்தும்
எங்கள் அப்பாவின் பிரிவை
தாங்க முடியாமல் தவிக்கும் நாங்கள்
உங்கள் மறைவால் மேலும் துயரடைந்தோம்
உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்

**சுஜிதா, சுஜிவன், ஜெயா**

## அன்பு சிவம் மாமா

எங்கள் கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண்ணை விட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்
கண்ணை விட்டு மறையாமல் எம்மோடு இருக்கின்றீர்கள்

**ஆதவன், மாதவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*"என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்நன்று கொன்ற மகற்று!"*

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் வாழ்வின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எமது நெஞ்சில் அணையா தீபமாக விளங்கும்

## திரு.மாணிக்கம் பத்மநாதன்


அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு, நேரில் வருகை தந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவிதவர்களுக்கும், மரணக் கிரியைகளில் பங்குபற்றி உதவியவர்களுக்கும், அந்தியேட்டி, வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள், இன்று நடைபெறும் ஆத்ம சாந்தி வைபவம் ஆகியவற்றில் கலந்து கொண்டவர்களுக்கும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எம் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## நன்றி

**இங்ஙனம்**

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

" இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும் "

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

OSAI Digital
for all your designing & printing needs
473,1/1A, Galle Road, Colombo 00600 | +94 77 5433356 | osaidigital@gmail.com | www.osaidigital.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org